தினமலர்
புதன் பிப்ரவரி 6 2019

# சடலங்களை பதப்படுத்த நவீன முறை

சென்னை, பிப். 6–

மனித சடலங்களை, நவீன முறையில், பதப்படுத்தும் முறை, ராமச்சந்திரா மருத்துவமனையில், இன்று அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

உலகளவில், மனித சடலங்களை, மருத்துவப் படிப்பு பயிற்சிக்கு பயன்படுத்தும் வகையில், 'பார்மலின்' என்ற புற்றுநோய் ஏற்படுத்தக்கூடிய ரசாயனம் கலந்த தொட்டியில், பதப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில், போரூர் ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி, உடற்கூறியியல் டாக்டர்கள், ஆஸ்திரேலியா, அடிலெய்டு பல்கலையில் நடைபெற்ற, நவீனமுறை சடலம் பதப்படுத்து முறைசார் பயிற்சி கருத்தரங்கில் பங்கேற்றனர்.

இந்த புதிய முறையில், பாதுகாப்பான, வேதியியல் பொருட்கள் பயன்படுத்தப்படுவதோடு, சடலங்களை மீண்டும், மீண்டும் பதப்படுத்தி, பாதுகாத்து, உறுப்புகளில், பயிற்சி அறுவை சிகிச்சை செய்ய முடியும்.

இதுகுறித்த மாநாடு, போரூர் ராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில், இன்று நடக்க உள்ளது.

அடிலெய்டு மற்றும் டோக்கியோ பல்கலையின், டாக்டர்கள் மைக்கேல் ஹாட்ஜஸ் மற்றும் ஜரோட் வார்டு பிரிசன் ஆகியோர், பயிற்சி அளிக்க உள்ளனர். இதில், 300க்கும் மேற்பட்ட உடற்கூறியியல் நிபுணர்கள் பங்கேற்க உள்ளனர்.